பக்கங்கள் 15+4

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 12 வியாழக்கிழமை 25.04.2024 அதிர்வு 269


## தமிழரசுக் கட்சிக்கு எதிரான

# யாழ். மாவட்ட நீதிமன்ற வழக்கும் ஒத்திவைப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணம் 04▶





## ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டு

# பரந்துபட்ட அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் ரணில்!

### பஸில் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களுடன் முதல் சந்திப்பு


ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில்கொண்டு பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.

அதன் முதல் நடவடிக்கையாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஏனைய கட்சிகள் மற்றும் குழுக்களின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கூட்டத்தில் மகாஜன எக்சத் பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்துகொண்டார்.

மேலும், அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, டிரான் அலஸ், ஹரின் பெர்னாண்டோ, காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களானமஹிந்தானந்தஅளுத்கமகே, அனுரபிரியதர்ஷன யாப்பா ஆகியோரும் பங்கேற்றனர். 04▶






# கொக்குவில் ரயில் நிலையத்தில் மோசடி! ரயில் நிலையப் பொறுப்பதிகாரி கைது!!

### காலவரையின்றி ரயில் நிலையம் மூடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – கொக்குவில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி சுமார் 20 இலட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பயணிகளுக்கான பிரயாணச் சீட்டு விற்பனை பணம் உள்ளிட்ட ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான சுமார் 20 இலட்ச ரூபா பணத்தை மோசடி செய்துள்ளமை கணக்காய்வில் தெரியவந்துள்ளமையால், பொறுப்பதிகாரிக்கு எதிராக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் 04▶

# வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் திங்கட்கிழமை போராட்டத்துக்கு அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)




வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"எங்களால் மேற்கொள்ளப்படவுள்ள ஜனநாயக அடிப்படையிலான போராட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கவனத்தை ஈர்ப்பதுடன் எங்களின் பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு அரசை வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இலங்கையில் மிக நீண்ட காலமாகப் பட்டதாரிகளுக்கான வேலையில்லாப் பிரச்சினை நிலவி வரும் சூழலில் அவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்லுகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கையின் கல்வித் திட்டத்தின் கீழ் 20 வருடங்கள் கல்வி கற்று பட்டதாரிகளாக வெளியேறுவோர் பின்னர் சாதாரண கூலித் தொழிலுக்கே சென்று வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வேண்டிய மனச்சங்கடமான நிலையையே எதிர்கொள்கின்றனர். ஏராளமான இளைஞர்கள் தமது எதிர்காலக் கனவுக்காகப் படித்து பட்டதாரிகளாகி இன்று எவ்விதத்திலும் பயனற்றவர்களாக வேலையில்லாப் பட்டதாரிகள் என்ற பெயரோடு வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான எமது அவல நிலைமை எதிர்கால மாணவர்களுக்கும் கல்வி மீதான விரக்தியையும் பட்டப்படிப்பு மீதான அவநம்பிக்கையையும் உருவாக்கியுள்ளது. இதன் தாக்கம் இலங்கையின் கல்வி அறிவு மற்றும் வளர்ச்சியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இவற்றை அறிந்தும் அறியாமலும் உள்ள அரசின் அசமந்தபோக்கானது நாட்டின் முதுகெலும்பாக இருக்க வேண்டிய கல்வி கற்ற இளைஞர்களைப் பயந்தவர்களாக வாழ வைத்துள்ளது.

இதன் விரக்தியாலும் மன அழுத்தத்தாலும் நாடு தழுவிய ரீதியில் பட்டதாரிகள் அனைவரும் ஜனநாயக அடிப்படையில் அமைதியான போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் வடக்கு மாகாணப் பட்டதாரிகளாகிய நாமும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பை மேற்கொள்ளவுள்ளோம்.

1. பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் போட்டிப் பரீட்சைகள் நிராகரிப்பு செய்யப்பட வேண்டும்

2. ஏற்கனவே அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மீண்டும் ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையில் கொண்டு வருதல் நியாயமற்றது. அது வேலையற்ற பட்டதாரிகளைப் பாதிக்கின்றது.

3. வடக்கு மாகாணத்திலுள்ள விசேட தேவையுடைய பட்டதாரிகளின் வாழ்வியல் தொடர்பான அரசின் கரிசனை என்ன?

4. வேலையற்ற பட்டதாரிகளும் சமூகத்தில் எதிர்கொள்ளும் அவமானங்களும் சவால்களும் அதன் ஊடாக ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் பட்டதாரிகளின் எதிர்காலம் குறித்து அரசின் நிலைப்பாடுகள் என்ன ?

இது போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்களுக்கு எந்தவித இடையூறுகளும் ஏற்படுத்தாது ஜனநாயக முறையிலான கவனயீர்ப்புப் போராட்டத்தில் தொடர்ந்து நமது கோரிக்கைகள் உள்ளடக்கிய மகஜரை ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதுடன் வடக்கு மாகணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்குமான மகஜர் கையளிப்பு இடம்பெறவிருப்பதால் வடக்கு மாகாண பட்டதாரிகள் உங்கள் நேரங்களை ஒதுக்கி இம் மாதம் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் காலை 9 மணியளவில் "நமக்காய் நாமே" என்னும் தொனிப் பொருளில் போராட்டம் நடைபெறவுள்ள நிலையில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் அதில் கலந்துகொள்ளுங்கள்." – என்றனர்.

இது தொடர்பான சந்தேகங்கள் மற்றும் தெளிவுபடுத்தலுக்கு 07735 39992 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# யாழ். போதனா வைத்தியசாலையில் மூளைக்காய்ச்சலால் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சலுக்காகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார், பள்ளிமுனை பகுதியைச் சேர்ந்த ஜோன் திரவியம் குமரசேன் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி காய்ச்சல் காரணமாக மன்னார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மறுநாள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (24) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மூளைக் காய்ச்சல் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட குழு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தைச் சந்தித்தது!







சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகளை நேற்று (24) பிற்பகல் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த விசேட சந்திப்பு ஒரு மணி நேரம் இடம்பெற்றது. இச்சந்திப்பைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான துணை அமைச்சர் செல்வி சன் ஹையன் இடையில் பிரத்தியக சந்திப்பும் இடம்பெற்றது.

பொருளாதாரம், வர்த்தக, அரசியல் உறவுகள் என பல துறைகள் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் வர்த்தக உறவுகளை ஏற்படுத்துவது தொடர்பில் இரு தரப்புக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இங்கு, சீனாவின் பொருளாதார அபிவிருத்தி மாதிரியை கருத்தில் கொண்டு, எமது நாட்டுக்குத் தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீண்டு வரக் கூடிய முறை குறித்தும் இரு தரப்பினரும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

இதன்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத் தலைவர்கள், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்ய எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர்.

மேலும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதிநிதிகள் குழுவிடம் தெரிவித்தார்.

அத்துடன், இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருப்பதால், அதன் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் குழுவினரிடம் தெரிவித்ததுடன், மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியைக் கட்டியெழுப்ப தானும், ஐக்கிய மக்கள் சக்தியும் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷஸ சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச திணைக்களத்தின் மத்தியக் குழுவின் துணை அமைச்சர் செல்வி சன் ஹையன், சீனத் தூதுவர், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் , சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச உறவுகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், அதன் பிரதிப் பணிப்பாளர்களில் ஒருவரான திருமதி வென் ஜுன், இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் ஆலோசகர் சென் சியாங்யுவான், துணை அமைச்சரின் செயலாளர், தூதரகத்தின் மூன்றாவது செயலாளராகப் பணிபுரியும் மற்றும் மொழிபெயர்ப்பாளர ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐக்கிய மக்கள் கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஹர்ஷன ராஜகருணா மற்றும் நளின் பண்டார ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

GSM
GUNAAM SUPERMARKET
குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





### கிழக்கு மாகாண மட்ட ஹொக்கியில்

# ஐந்தாவது தடவையாக சம்பியனாகி சாதித்தது காரைதீவு லயன்ஸ் அணி!

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண ஹொக்கித் தொடரில் ஐந்தாவது தடவையாக சம்பியனாகி காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி சாதனை படைத்தது.

கிழக்கு மாகாண மட்ட ஹொக்கித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிறுக்கிழமை (21) திருகோணமலை - கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியும் அம்பாறையை பிரதிநிதித்துவப்படுத்திய காரைதீவு லயன்ஸ் அணியும் மோதின.

இதில் 2-0 என்ற அடிப்படையில் காரைதீவு லயன்ஸ் அணி வெற்றி பெற்று மாகாண மட்ட சம்பியனானது.

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்தினர், அதன் ஸ்தாபகத் தலைவர் தவராசா லவன் தலைமையில் திருமலைக்குச் சென்று விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

“தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையாக சம்பியன் பட்டத்தைப் பெற்றமை பாராட்டுக்குரியது. இது அம்பாறை மாவட்டத்திற்கும் காரைதீவுக்கும் பெருமை சேர்த்துள்ளது” என்று அக்கழகத்தின் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கொக்குவில்...**

முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள கோப்பாய் பொலிஸார், கொக்குவில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரியைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, கொக்குவில் ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனவும், பிரயாணச்சீட்டைப் பெற யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் காட்சிப்படுத்தப்பட்டு நிலைய அலுவலகக் கதவுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் ரயில் நிலையம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளமையால் கொக்குவில், திருநெல்வேலி பகுதி மக்களும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி , யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவன மாணவர்கள் எனப் பெரும்பாலானோர் ரயில் பயணங்களை மேற்கொள்ள சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

**யாழ். மாவட்ட...**

மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜுன் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பான வழக்கு இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசன் இன்றும் நீதிமன்றத்தில் ஆஜராகததால், திருகோணமலையில் அவரது சரியான முகவரிக்கு மீண்டும் அழைப்புக் கட்டளை அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்போது முதலாம் மற்றும் மூன்றாம் எதிராளிகள் தரப்பு சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தங்கள் தரப்பு கருத்துக்களை முன்வைக்கக் கால அவகாசம் கோரினார்.

இதையடுத்து எதிராளிகள் தமது சமர்ப்பணங்களை முன்வைக்கக் கால அவகாசம் வழங்கி எதிர்வரும் ஜீன் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றதைத் தொடர்ந்து வழக்கு எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**பரந்துபட்ட...**

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்கவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் தனித்தனியாக மே தினப் பேரணிகளை நடத்துவது எனவும், அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில்கொண்டு ஒத்த கருத்துடைய ஏனைய கட்சிகளுடன் இணைந்து பரந்த கூட்டணியை உருவாக்குவது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் புதிய அரசியல் கூட்டணி சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் ஒரு தரப்பு வலியுறுத்தியது.

இதையடுத்து அனைத்து கட்சிகளும் குழுக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சின்னத்தில் புதிய கூட்டணியைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. மற்றும் அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

எதிர்வரும் ஜுன் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது கடனை இலங்கை பெற்ற பின்னர் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரசாரத்தைத் தொடங்குவார் என்று இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, டலஸ் அழகப்பெரும மற்றும் பிவித்துரு ஹெல உறுமய தலைமையிலான அரசியல் குழுக்களுக்கும் அழைப்பு விடுவதற்கு மேற்படி கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

# ஞானச்சுடர் சஞ்சிகையின் 316 ஆவது இதழ் வெளியீடு




தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆன்மீக சஞ்சி கையான ஞானச்சுடர் 316 ஆவது இத ழ் வெளியீட்டு விழா நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுத கலா சுரபிகலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம சேவையாளர் க.ஸ்ரீஸ்கந்தராசாவும் மதிப்பீட்டுரையை பதில் நீதிவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சோ. தேவராசாவும் நிகழ்த்துவார்கள்.

# தந்தை செல்வாவின் 47ஆவது நினைவு தின எழுச்சிக் கூட்டம்!

(ஹஸ்பர் ஏ.எச்.)



இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையானது கட்சியின் நிறுவுனர் தந்தை செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நினைவு எழுச்சி கூட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட தலைவர் ச.குகதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வானது நாளை மறுதினம் 27 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நூறு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. மேலும் பாவரங்கள், சிறப்புரைகளும் இடம் பெறவுள்ளன என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

# "விபுலவிருட்சம்" நூல் வெளியீடு!



காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40 வருட நிறைவை முன்னிட்டு "விபுலவிருட்சம்" என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் ரோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்துகொண்டார். முதற் பிரதியை தலைவர் சாந்தன் பிரதம அதிதி கணபதிப்பிள்ளை மகேசனிடம் வழங்கி வைத்தார்.

ஏனைய அதிதிகளான அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உள்ளிட்ட அதிதிகளுக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன.

மலர் ஆசிரியர் - முன்னாள் தலைவர் த.தவக்குமார், நூலாக்கக் குழு ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, செயலாளர் எஸ்.கிருசாந் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# பருத்தித்துறை நகர சபையினரால் புதிய மரக்கறி சந்தைக்கு அடிக்கல்

பருத்தித்துறை நகர சபையினரால் பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் மீன்சந்தைக்கு அருகில் புதிய மரக்கறி சந்தை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்றது.

சமய கிரியைகளை தொடர்ந்து பருத்தித்துறை நகர சபை வருமான வரி பிரிவு கிளைத் தலைவர் தி.சிவ நேசன் மரக்கறி சந்தைக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

51 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த மரக்கறி சந்தைக் கட்டடம் பருத்தித்துறை நகர சபையின் சொந்த நிதியில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை நகர சபையின் நிர்வாக பொறுப்பு அதிகாரி, நிரஞ்சனி உமாகாந்தன் பிரதம பொது முகாமைதுவ அதிகாரி கமலினி உதயசேகரன், உள்ளூராட்சி உதவியாளர் தாரணி மதியழகன், கணக்கு பதிவு அதிகாரி செபஸ்தியாம்பிள்ளை ராஜ்குமார் உட்பட பருத்தித்துறை நகரசபை அதிகாரிகள் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

நிர்மாணிக்கப்படும் மரக்கறிச் சந்தைக்கான காணி 23 மில்லியன் ரூபா செலவில் சபையின் சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பயனற்ற அமெ. அறிக்கை

இலங்கையின் - இலங்கை அரசின் - மனித உரிமைகள் தொடர்பான வண்டவாளத்தை மீண்டும் அம்பலப்படுத்தியிருக்கின்றது அமெரிக்கா.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அதிகாரிகளைக் கண்டறிந்து தண்டிக்க இலங்கை குறைந்தபட்ச நடவடிக்கைகளையே எடுத்துள்ளது என்ற குற்றச்சாட்டை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் முன்வைத்துள்ளது.

ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகம், இலங்கையின் மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான தமது 2023ஆம் ஆண்டு அறிக்கையிலேயே இராஜாங்கத் திணைக்களம் இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான நடத்தை அல்லது அரசாங்கத்தால் தண்டனை, கடுமையான மற்றும் உயிருக்கு ஆபத்தான சிறை நிலைமைகள் மற்றும் தன்னிச்சையான கைது அல்லது காவலில் வைத்தல் போன்ற குறிப்பிடத்தக்க மனித உரிமைகள் பிரச்சினைகள் பதிவாகியுள்ளன என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது பிந்திய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கம் அல்லது அதன் முகவர்கள் தன்னிச்சையான அல்லது சட்டத்திற்குப் புறம்பான கொலைகளை இந்த ஆண்டில் செய்தமை பற்றியபல செய்திகள் வந்துள்ளன. பொலிஸ் காவலில் பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன. பொலிஸார் சந்தேக நபர்களை அழைத்துச் சென்றபோது பல மரணங்கள் நிகழ்ந்துள்ளன. விசாரணையின் ஒரு பகுதியாக குற்றம் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது அல்லது விசாரணையின் போது சந்தேக நபர்கள் பொலிஸாரை தாக்கியதாகவோ அல்லது தப்பிக்க முயன்றதாகவோ கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல சந்தேக நபர்களை அரசாங்கம் பிணையில் விடுவித்துள்ளது. அதே சமயம் ஓரினச் சேர்க்கை, இருபாலினம், திருநங்கை, வினோதமான அல்லது இடை பாலின நபர்களின் உரிமைகளை மதிக்கவும், திருநங்கைகளை கைது செய்து துன்புறுத்துவதை நிறுத்தவும் பொலிஸ் துறை புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தை விமர்சிப்பவர்களைக் கைது செய்து தண்டிக்கவும், அரசாங்கக் கொள்கைகள் அல்லது அதிகாரிகள் மீதான விமர்சனத்தைத் தடுக்கவும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் , ICCPR சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தை அதிகாரிகள் தொடர்ந்து பயன்படுத்தியுள்ளனர்.

அதிகாரிகளின் ஊழலுக்கு எதிராக தண்டனைகளை சட்டம் வழங்குகிறது. ஆனால் அரசாங்கம் சட்டத்தை திறம்பட செயல்படுத்தவில்லை.

மேலும், அரசாங்கத்தின் ஊழல்கள் குறித்த பல அறிக்கைகள் இந்த ஆண்டில் வெளிவந்துள்ளன என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

காலம் தோறும் அமெரிக்க போன்ற மேற்கு நாடுகள் இப்படி வண்டவாள அறிக்கையை வெளியிட்டு இலங்கையின் நிலைமையை அம்பலப்படுத்தி, மனித உரிமைகள் விடயத்தில் தங்களை உயர்ந்த நாடுகளாகக் காட்டிக்கொள்கின்றனவே தவிர, இவ்வாறு மோசமான மனித உரிமை நிலைவரத்தை வெளிப்படுத்தும் நாடுகளை திருத்துவதற்கு காத்திரமான எந்த நடவடிக்கையையும் பயனுள்ள வகையில் எடுப்பதே இல்லை என்பதுதான் இதில் பொதிந்துள்ள துரதிஷ்டமான நிலைமையாகும்.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மோசமான மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் இழைக்கப்பட்டன என்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானங்களில் அமெரிக்கா பல தடவைகள் தெரிவித்து விட்டது.

ஆனால் அந்தக் கொடூரங்கள், குற்றங்கள் இழைக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்தும் பாதிக்கப்பட்டருக்கு நீதி கிடைக்கவில்லை. பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படவில்லை. குற்றம் இழைத்தோர் தண்டிக்கப்படவில்லை. இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படவில்லை.

குற்றங்கள், மனித உரிமை மீறல்களைத் தடுக்கவும், குற்றமிழைத்தோரொ பொறுப்புக் கூற வைத்துத் தண்டிக்கவும், மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும், சரியான பொறிமுறையும் மார்க்கமும் இல்லாத நிலையில், அமெரிக்கா இத்தகைய அறிக்கைகளை வெளியிடுவது பயனற்றது. அவை வெறும் வெள்ளைக் காகித ஏட்டுச் சுரைக்காய்கள்தான். அவற்றால் பயனில்லை.

# சிறுவர்களை பாதுகாப்பது நாம் எல்லோரதும் கடமை!



(சர்ஜுன் லாபீர்)

இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள் என்பதை அறிந்திருந்தாலும் சிலர் சிறுவர்கள் விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை.

சின்னஞ் சிறார்களின் எதிர்காலத்தை சூனியமாக்கும் போதைப் பொருள் பாவனையில் இருந்து அவர்களைத் தடுப்பதற்கும், தங்களுடைய பிள்ளைகளை பொருத்தமற்ற உறவுகளிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாடு செல்வதை தடைசெய்வதற்கும், கல்வி கற்கவேண்டிய வயதில் தொழிலுக்கு அமர்த்தப்படுவதை தடுப்பதற்கும் அதனை மீறினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் இன, மத பேதம் கடந்து அனைவரும் உயரிய சமூக சிந்தனையோடு செயற்படுவதற்கு முன்வர வேண்டும்.

அதேபோன்று தற்போதைய கால சூழ்நிலையைப் பொறுத்தவரை சிறுவர்களுக்கு வழிகாட்டுவதில் பெற்றோர்களும், ஆசிரியர்களும்,அயலவர்களும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் வலுவூட்டல் , சமூக நலத் திட்டங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்கள் அமைப்பின் பணிப்பாளர் எஸ்.எம் அறூஸ் தெரிவித்தார்.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு சம்மந்தமான பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு.கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய காலத்தில் குறிப்பாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட சிறுவர்களில் அதிகமானோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாக்கியுள்ளார்கள். எனவே அந்தச் சிறுவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அவர்களை நற் பிரஜைகளாக மாற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

இன்றைய உலகில் பிறப்பில் ஏழ்மையில் வாழ்ந்தவர்கள்தான் அதிகமானோர் பணக்காரர்களாக உருவாகியுள்ளார்கள். ஏனெனில் அவர்களுக்கு ஏழ்மையின் தன்மை புரியும் அதனால்தான் அவர்கள் முன்னேறிச் செல்கின்றார்கள் அது போல் நீங்களும் எதிர்காலத்தில் முன்னேற வேண்டும். ஏனையவர்களுக்கு இடம் கொடுத்து முன்னேற்றமடையவேண்டும்.- என்றார்.



# தம்பலகாமம் பிரதேச செயலக புத்தாண்டு விளையாட்டுப் போட்டி

(ஹஸ்பர் ஏ.எச்.)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி வங்கி ஏற்பாடு செய்த விளையாட்டு போட்டிகள் அண்மையில் முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பலூன் உடைத்தல், முட்டி உடைத்தல், தலையணை சமர், யானைக்கு கண் வைத்தல் உட்பட பல போட்டிகள் இடம் பெற்றன.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள, மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ. ஆர். எம். சித்திக் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர்.







# கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற மகிழ்ச்சி விழா!

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

ரமழான் நோன்புப் பெருநாள் மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு என்பவற்றை முன்னிட்டு கல்முனை மாநகர சபையில் ஏற்பாடு செய்யப்பட்ட மகிழ்ச்சி விழா நேற்று புதன்கிழமை (24) மாநகர கேட்போர் கூடத்தில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

பல்லின சமய ஆராதனைகளுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் ஆகியோர் உரையாற்றினர்.

நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரான என். பரமேஸ்வர வர்மன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதன்போது பொறியியல் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். டிலிப் நௌஷாத் உள்ளிட்டோரின் பாடல் மற்றும் கலாசார, விநோத நிகழ்ச்சிகள் சபையோரின் வரவேற்பைப் பெற்றிருந்தன.

மகிழ்ச்சி விழாவின் ஓர் அங்கமாக பகல் போசன விருந்துபசாரமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உள்ளூராட்சி உதவியாளர் சி. சர்ஜுன் தாரிக் அலி, வேலைகள் அத்தியட்சகர் எம்.ரி.எம். நஹீம், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.பாஸித், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸ் தலைமையிலான குழு இவ் விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.





# உலக அமைதிக்கான ஆன்மீக நடை பயணம்

**(த.சுபேசன்)**

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஆராதனை மஹோற்சவத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை வவுனியா சத்திய சாயி நிலையத்தின் ஏற்பாட்டில் உலக அமைதிக்கான ஆன்மீக நடை பயணம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காயத்திரி மந்திரம், ஸ்ரீருத்ரம், சாயி காயத்திரி நாம பாராயண பஜனை உள்ளிட்ட இறை பாடல்களை இசைத்தவாறு சுவாமி சத்திய சாயி பாபா தங்க ரதத்தில் ஆரோகணிக்க வவுனியா நகரை வலம் வந்திருந்தனர்.

ஆன்மீக நடை பயணத்தில் மாணவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# சமூக ஆளுகைத் தளத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தைத் தளமாகக் கொண்டு செயற்படும் சமூக ஆளுகைத் தளத்தினுடைய புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிலையில் சமூக ஆளுகைத் தளத்தினுடைய புதிய தலைவராக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனுசியா ஜெயகாந் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

செயலாளராக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சுவந்தினி, பொருளாளராக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரஜீவ்கரன், உப தலைவராக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரலிஸ்ரன், உப செயலாளராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மகீசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக சுதா, பிரிசித்தா, மேரி கனிஸ்ரா, அச்சுதன் மற்றும் றொசானி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவற்றுக்கு மேலாக பிரதேச ஒருங்கிணைப்பாளர்களாக யாழ் மாவட்டத்துக்கு சுபேசன்,கிளிநொச்சி மாவட்டத்துக்கு சுபதர்சினி, வவுனியா மாவட்டத்துக்கு தனிகா, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மேரி ஜெனிஸ்ரா மற்றும் மன்னார் மாவட்டத்துக்கு பாலேஸ்வரி ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

புதிய நிர்வாகத் தெரிவில் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைக்கான அமைப்பினர், சமூக ஆளுகைத் தளம் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# மட்டக்களப்பு செட்டிபாளயத்தில் புதிய விளையாட்டு அரங்கம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு செட்டிபாளயத்தில் கண்ணகி அம்மன் விளையாட்டு மைதானத்தின் அரங்குக்கான அடிக்கல் நடும் விழாவானது நியூற்றன் கழகத்தின் தலைவர் எஸ். வேணுகோபாலராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.



இந்தப் பிரதேச இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் முகமாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சட்டத்தரணி சிவப்பிரியா வில்வரெட்ணத்தால் ஜனாதிபதி செயலணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கணபதிபிள்ளை மோகனிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக செட்டிபாளயம் பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு அரங்கு நிர்மாணப் பணி மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி செயலணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சுமார் 05 மில்லியன் ரூபாவைத் தனது தனிப்பட்ட நிதியிலிருந்து இந்தத் திட்டத்துக்குக் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி காணி விவகார அமைச்சின் செயலாளர் எம்.கோபாலரெத்தினம், பிரதேச சபை செயலாளர், பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# உதவும் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் விளையாட்டு விழா!



(கல்லடி)

பின்தங்கிய பிரதேச கல்வி விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்காக உழைத்து வரும் உதவும் கரங்கள் அமைப்பின் அனுசரணையில் சின்ன கால போட்டமடு கம்பன் பாலர் பாடசாலையில் விளையாட்டுப்போட்டி அண்மையில் நடத்தப்பட்டது.

பாலர் பாடசாலை ஆரம்பித்து 15 வருடங்கள் கடந்த நிலையில் நடத்தப்பட்ட முதலாவது விளையாட்டுப் போட்டி இதுவென்பது குறிப்பிடத்தக்கது

பாலர் பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி ஜெயகலா நிசாந்தனின் ஒழுங்கு படுத்துதலின் கீழ் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக சிரேஷ்ட விரிவுரையாளரும், உதவும் கரங்கள் நிறுவனத்தின் தலைவருமான எஸ். ஜெயராஜாவும், கௌரவ அதிதிகளாக உதவும் கரங்கள் நிறுவனப் முகாமையாளர் சி. புவிராஜன் மற்றும் உதவும் கரங்கள் விபுலானந்தர் பாடசாலை ஆசிரியைகளான திருமதி .கே ஜெயந்தினி, கே .கவிதா, எம். பிரவிணி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு கம்பன் பாலர் பாடசாலை இணைப்பாளர் யோகநாதன், மாதர் சங்கத்தினர், மற்றும் விளையாட்டுக் கழகத்தினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊசியில் நூல் கோர்த்தல் ,பணிஸ் சாப்பிடுதல், பலூன் ஊதி உடைத்தல் போன்ற போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய பாலர்களுக்கு அதிதிகளால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்தோடுதொப்பிமாற்றுதல்,மாஊதி சில்லறை நாணயம் எடுத்தல் போன்ற போட்டிகள் பெரியவர்களுக்காக நடத்தப்பட்டன.





# நுவரெலியா சீதையம்மன் ஆலயத்துக்கு அயோத்தி ராமர் ஆலயப் பொறுப்பாளர்!





(ஆ.ரமேஸ்)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் அயோத்தி ஸ்ரீராமர் ஆலயத்தின் மாளிகை பொறுப்பாளரும் ஆலயத்தின் முக்கிய உறுப்பினருமான ஸ்ரீ கோவிந்த் தேவ்கிரி ஜி மகராஜ், நுவரெலியாவின் வரலாற்று சிறப்புமிக்க புனித தலமான சீதையம்மன் ஆலயத்துக்கு நேற்றுக் (24) காலை சென்றிருந்தார்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சீதையம்மன் ஆலயத்தின் தலைவருமான கலாநிதி வேலுசாமி ராதாகிருஷ்ணன் தலைமையில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாடசாலை மாணவ, மாணவிகளால் பறை இசைக்கப்பட்டு மேள வாத்தியங்களுடன்கலாச்சார நடனத்துடன் ஆலயத்துக்கு அழைத்து வரப்பட்ட சுவாமி ஆலயத்தில் பொறிக்கப்பட்டிருந்த ஞாபகார்த்த பளிங்குக் கல்வெட்டைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பின் சுவாமி மற்றும் அவரது குழுவினரால் சிறப்பு பூஜைகளில் ஈடுபட்டதை தொடர்ந்து ஆலயத்தில் அனுமன் பாதஸ்தலத்துக்குச் சென்று வழிபட்டவுடன் ஆலய தீர்த்த ஆற்றில் சுவாமி ஜலபிரவாகம் செய்தார்.

இதனை தொடர்ந்து ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள தனியார் விடுதியில் ஆலய நிர்வாக சபையுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

## உலக மலேரியா தினம் ஏப்ரல் 25

# அபாயம் மிக்க உயிர்க்கொல்லி மலேரியா...!


நடராஜன் ஹரன்

நுளம்புகளால் ஏற்படக் கூடிய மரணம்கள் அதிகரித்து வருவது உலக சுகாதார நிறுவனத்துக்குப் பெறும் சவாலாக அமைந்துள்ளது. நுளம்புகளை ஒளிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நோய்த் தொற்றுக்குள்ளானவர்களை சுக தேகியாக மாற்றுவதற்கும் வருடா வருடம் பெரும் தொகை நிதி செலவு செய்யப்பட்டு வருகின்றது.

பல்கிப் பெருகும் நுளம்புகள் பல வகைகளில் உள்ளன. அவற்றில் ஈடிஸ் எஜிப்டை, ஈடிஸ் அல்போபிக்டஸ் , அனோபிளஸ், கியுலெக்ஸ் போன்ற சில வகை நுளம்புகள்தான் மனித ஆரோக்கியத்துக்கு ஆபத்தானதாக உள்ளன.

நுளம்புகளால் டெங்கு , சிக்குன்குனியா , மலேரியா, ஜப்பானிஸ் என்ஸபலைடிஸ், மூளைகாய்ச்சல், யானைக் காச்சல் நோய்கள் உண்டாகின்றன. இவற்றில் டெங்கு நோய்தான அன்மைக்காலம் முதல் இந்த நாட்டில் பொது சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது.

எமது நாட்டிலிருந்து மலேரியா நோய் முளு அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களால் கொண்டுவரப்படும் காவியானது எமக்கு சவாலாகவும் மீண்டும் பரவும் ஆபத்தை ஏற்படுத்துகிறது.

2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஏப்ரல் 25 ஆம் திகதி உலக மலேரியா தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாளில், உலகம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம்.

### மலேரியா என்றால் என்ன?

மலேரியா என்பது ஒட்டுண்ணிகளால் ஏற்படும் ஒரு தொற்றுநோய். இது நுளம்பால் ஒருவரிலிருந்து ஒருவருக்குக் கடத்தப்படுகிறது. தொற்று நோயானது, குளிர் நடுக்கம், காய்ச்சல், மற்றும் ஃப்ளூ காய்ச்சல் போன்ற வேறு அறிகுறிகளை ஏற்படுத்தும். இதற்குச்சிகிச்சை செய்யப்படாவிட்டால் மரணத்தில் முடியலாம். பெரும்பாலும் பிள்ளைகள்தான் மலேரியா நோய்க்காளாகும் ஆபத்திலிருக்கிறார்கள்.

தற்பொழுது அனோபிலிஸ் ஸ்டெபென்சி எனும் புதிய வகையைச் சேர்ந்த நுளம்பால் வேகமாக பரவும் ஆபத்தினை கொண்டு இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தல் விடுத்திருந்தது.

எமது இலங்கையில் முதல் முதலாக மன்னாரில் இவ்வகை நுளம்பினம் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வட மாகாணங்களில் யாழ்ப்பாணத்திலும் கண்டுபிடிக்கப்பட்டது. மலேரியா கட்டுப்பாட்டு பிரிவினரின்மிகவும் பொறுப்பான செயற்பாட்டால் தற்பொழுது ஆபத்துக் குறைந்து கட்டுப்பாட்டில் உள்ளது.


பொதுவாக, மிகவும் பின்தங்கிய, குடிசை மற்றும் வறுமையில் வாடும் மக்கள் வசிக்கும் பகுதியில்தான் மலேரியாவின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. தமிழகத்தில் மலேரியாவால் உயிரிழப்பு இல்லை என்றாலும், ஒவ்வொரு ஆண்டும் மலேரியா காய்ச்சல் தொற்று பாதிப்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது.

மலேரியா என்பது நுளம்புகள் மூலம் பரவும் ஒரு ஒட்டுண்ணி. இதற்கு பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (plasmodium vivax) என்று பெயர். இந்த ஒட்டுண்ணியை பரப்பும் நுளம்புக்கு அனோபிலஸ் (Anopheles) என்று பெயர்.

### அறிகுறிகள்

- தொற்றுள்ள நுளம்புகள் கடித்த, 10-15 நாளில் நோய் வெளிப்படும். நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாக உள்ளவர்களுக்கு 7 நாளில் கூட வெளிப்படலாம்.

தொடர்ச்சி▼



# அபாயம் மிக்க உயிர்க்கொல்லி மலேரியா...!

தொடர்ச்சி▲

- மலேரியா காய்ச்சல் மூன்று கட்டங்களாக வெளிப்படும். முதல் கட்டத்தில் நோயாளிக்கு லேசான காய்ச்சல், தலை வலி, உடல் வலி, வாந்தி, சோர்வு இருக்கும். இதனைத் தொடர்ந்து குளிர்க் காய்ச்சல் ஏற்படும். உடல் நடுக்கம் எடுக்கும். இது சுமார் அரை மணி நேரம் நீடிக்கும்.
- இரண்டாவது கட்டத்தில் காய்ச்சல் கடுமையாகும். உடல் அனலாகக் கொதிக்கும். இது சுமார் ஆறு மணி நேரம் நீடிக்கும்.
- மூன்றாவது கட்டத்தில் காய்ச்சல் குறைந்து, வியர்வை கொட்டும். உடல் ஐஸ் போல குளிர்ந்துவிடும். இப்போது நோயாளி சாதாரணமாகக் காணப்படுவார். பிறகு, இதே காய்ச்சல் மறுநாளோ ஒரு நாள்விட்டு ஒரு நாளோ அல்லது மூன்று, நான்கு நாள்களுக்கு ஒரு முறையோ மீண்டும் வரும்.
- இந்த அறிகுறிகள் தெரிந்தால், உடனடியாக இரத்தப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம்.

## நோயைத் தடுத்தல்

மலேரியா நோயுள்ள ஒரு பகுதிக்கு நீங்கள் செல்ல விரும்பினால், தொற்றுநோயைத் தவிர்ப்பதற்கு நீங்கள் உங்களைத் தயார்படுத்த வேண்டும். அண்டி மலேரியா மருந்துகள் தான் தொற்றுநோயைத் தடுப்பதற்கு மிகவும் பொதுவான வழியாகும். கட்டளையிட்டபடியே மருந்தை நுணுக்கமாக உட்கொள்ள வேண்டியது முக்கியம்.

நீங்கள் புறப்படுவதற்குச் சில நாள்களுக்கு முன்பாக அது எடுக்கப்பட்டு, பிரயாண காலம் முழுவதும், மற்றும் நீங்கள் வீடு திரும்பிய ஒரு சில வாரங்களுக்குப் பின்னரும் அதை உட்கொள்ளவேண்டும்.

## தடுப்பதற்கு வேறு வழிகள்

பூச்சிக்கொல்லி மருந்திடப்பட்ட படுக்கை வலைகளை உபயோகித்தல், பூச்சி விரட்டிகளை உபயோகித்தல், நீண்ட சட்டைக் கைகள் மற்றும் நீளமான காற்சட்டைகள் போன்ற பாதுகாப்பு உடைகளை அணிதல், மாலை இருட்டு நேரம் முதல் விடியற் காலை வரை வீட்டுக்குள் இருத்தல், ஜன்னல்களைத் திறந்து வைத்திருப்பதற்குப் பதிலாக, குளிரூட்டிகளை உபயோகித்தல்.

## தாய்ப் பாலூட்டப்படும் குழந்தைகள்

உங்கள் பிள்ளை தாய்ப் பாலூட்டப்பட்டும் நீங்கள் மலேரியா நோய்க்கான மருந்து எடுத்துக் கொண்டிருந்தாலும்கூட, குழந்தைக்கும் மருந்துகள் தேவைப்படும்.

உங்கள் பிள்ளையின் காய்ச்சல் அல்லது மற்ற அறிகுறிகள், மருந்து உட்கொண்டு 1 முதல் 2 நாள்களின் பின்பும் முன்னேற்றத்தைக் காண்பிக்கவில்லை என்றால், உங்கள் பிள்ளைக்குப் பல நாள்களாக மருந்து கொடுக்கத் தவறிவிட்டால், உங்கள் பிள்ளையின் கண்கள் மஞ்சள் நிறமாறினால் உடனடியாக வைத்தியரை நாடவேண்டும்.

## பரிசோதனை

எளிய இரத்தப் பரிசோதனை மூலம் மலோரியா காய்ச்சலை கண்டறியலாம். மேலும், எந்த வகையான ஒட்டுண்ணி, மருந்துக்கு எதிராக செயல்படும் தன்மையைப் பெற்றுள்ளதா, ஏதேனும் உள் உறுப்பில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா என்பதை இதன் மூலம் கண்டறியலாம்.

## தடுக்கும் வழி

மலேரியா பரவக் காரணம் நுளம்புகள். எனவே, நுளம்புகள் ஒழிப்பு மட்டுமே மலேரியா காய்ச்சலை




குறைக்க ஒரே வழி. நுளம்புகள் ஒழிக்க தொடர் முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள மக்களின் அபாயம் பெருமளவு குறைக்கப்படும்.

ஆகவே, மலேரியா நோயை கட்டுப்படுத்தும் பணிகளில் உலக சுகாதார நிறுவனம் தீவிர தொண்டாற்றி வருகிறது. இதையொட்டி, மலேரியாவை ஒழிப்பதில் உலக நாடுகள் அனைத்தும் பாகுபாடு இன்றி ஒருங்கிணைத்து, செயல்பட வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் டெங்குநோய் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதும் டெங்குநோய் இன விருத்தி செய்யுக் கூடிய இடம்களை முற்றாக அழித்து விடுவதும் இந்த ஆட்கொல்லி நோய் பற்றிய பாதிப்புக்களை மக்களுக்கு வலுவூட்டலுமாக பல்வேறுபட்ட சேவைகளைச் செய்து வருகின்றது.

அனைத்து வகையான நுளம்புகளின் பெருக்கத்துக்கும் பொதுவாகத் தேங்கி நிற்கும் சிறிய நீர்தான் காரணம். அதில்தான் பல்கிப் பெருகும் இயல்புகளை நுளம்புகள் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் எமது நாட்டில் நுளம்புகள் பல்கிப் பெருகுவதற்குத் தேவையான சூழலும் வாய்ப்புக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்பது நிதர்சனமான விடயமாகும் இதற்கு நாகரீக வளர்ச்சியும் ஒரு

தொடர்ச்சி▼

# அபாயம் மிக்க உயிர்க்கொல்லி மலேரியா...!

தொடர்ச்சி▲

காரணமாகா அமைந்துள்ளது.

மனிதர்களால் உருவாக்கப்பட்ட நீர் தேங்கி நிற்கும் கைவிடப்பட்ட டயர்கள், பொலித்தீன் பாவனை, பிளாஸ்ரிக் பொருள்கள், சிறட்டைகள், தகர டின்கள், கூரை பீலிகள், இளநீர் குரும்பைகள், பூச்சாடிகள் உள்ளிட்ட பல பொருள்களில் நுளம்புகள் பெருகுகின்றன.

தற்காலத்தில் இந்த நுளம்புகள் செடி கொடிகளிலும் இன விருத்தி செய்வதுடன் நல்ல நீர் நிலைகளான குடிநீர் கிணறுகளிலும் தமது வாழ்விடத்தை மாற்றி அமைத்துள்ளன என்று சுகாதார பிரிவு கூறுகின்றது

ஒரு ஆண்டில் சராசரியாக 7லட்சத்து 75 ஆயிரம் பேர் டெங்கு தொற்றால் இறப்பதாக வைத்திய அதிகாரிகளின் அறிக்கை கூறுகின்றது. இயற்கை சீற்றத்துடன் தற்காலத்தில் நோய் தொற்றுக்களால் மனித குலம் மடிவது கவலைக்குரிய விடயமே ஆகும்.

மலேரியாவைப்போல தற்காலத்தில் டெங்கு தொற்று மருத்துவத் துறைக்கு சவால்விடும் ஒரு தொற்று நோயாக உருவெடுத்து வருகின்றது

டெங்கு என்பது ஈடிஸ் நுளம்பு வகையால் பரவும் ஒரு வைரஸ் தொற்று நோயாகும். இத் தொற்றுக்குள்ளானவர்கள் எவ்வித நோய் அறிகுறிகளையும் வெளிப்படுத்த மாட்டார்கள். ஒரு சிலருக்குக் காய்ச்சல் ஏற்படுவதுடன் அவை வேறுபடுத்தப்படாத காய்ச்சல், டெங்கு குருதிப் போக்குக் காய்ச்சல், சாதாரண டெங்குக் காய்ச்சல் என பல நிலைகளாகக் காணப்படும்.

ஈடீஸ் பெண் நுளம்பு மூலம் டெங்கு பரவுகின்றது. ஈடிஸ் நுளம்பானது தொற்று ஏற்பட்ட மனிதர்களிடம் இருந்து குருதி உட்கொள்வதன் மூலம் வைரசைப் பெற்றுவருகின்றது. பொதுவாக டெங்கு நகரப் புறங்களிலேயே அதிகம் ஏற்படுகின்றது.

டெங்கு உயிராபத்து அச்சுறுத்தல் மிக்க ஒரு நோய். ஆதலால் அதனை ஆரம்பத்தில் இனம்கண்டால் முழுமையாக குணப்படுத்தி விடலாம். இது முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய நோய். பொதுவாக ஒருவர் டெங்கு நோய்க்கு உள்ளானால் பின்வரும் குணா-ம்சங்களை அவதானிக்ககூடியதாக இருக்கும்.

இரண்டு மூன்று நாட்களுக்கு கடும் காய்ச்சல் தலைவலி தசைனார் வலி மூட்டுவலி குமட்டல் வாந்தி பேதி போன்றவாறான அறிகுறிகளை குறிப்பாக அவதானிக்கலாம்.

இருப்பினும் அதனை குருதிப் பருசோதனை மூலமே உறுதிப்படுத்த முடியும். இதன் தாக்கத்தால் குருதிச் சிறுதட்டு குறைவடைந்து காணப்படும். இதுவே இதன் பிரதான பண்பு இந் நோயை ஆரம்பத்தில் கண்டறியத் தவறினால் மரணம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

மலேரியா ஒரு தொற்றுநோய். அது நுளம்புகளால் கடத்தப்படுகிறது. உலகத்தின் சில பாகங்களுக்குப் பிரயாணம் செய்யும்போது மலேரியா நோய் தொற்றிக்கொள்ளலாம்.

அதன் அறிகுறிகள் ஒரு பயங்கரமான ஃப்ளூ காய்ச்சல் அறிகுறிகளுக்கு ஒத்திருக்கலாம்.

உங்கள் பிள்ளைக்கு மலேரியா நோய் அறிகுறிகள் இருந்தால், உடனே ஒரு மருத்துவரைச் சந்திக்கவும்.

மலேரியா நோய்க்குச் சிகிச்சையளிக்கப்படாவிட்டால் அது மரணத்தில் முடியலாம். மலேரியாவால் பாதிக்க-ப்பட்ட ஒரு பகுதிக்கு நீங்கள் செல்வதாக இருந்தால், தொற்று நோயைத் தவிர்ப்பதற்கு நீங்கள் உங்களைத் தாயார்ப்படுத்த வேண்டும். குறிப்பாக வெளி நாடுகளில் இருந்துவரும் உங்கள் உறவினர்கள், நண்பர்களை ஒரு தடவை குருதி பரிசோதனை செய்துகொள்ளச் சொல்ல வேண்டும். மற்றும் நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை அளித்துவிடுதல் , கிணறுகளை மூடி வைத்தல், கிணற்றுக்குள் சுகாதார பணிமனையி-னுடாக மீன்களை பெற்று வளர்த்தல், புகை விசுற அழைத்தல் போன்ற செயற்பாட்டால் இவற்றை அளி-த்து விட முடியும்

முடியாதது எதுவும் இல்லை. எனவே இன்றே சிந்தி-ப்போம் செயற்படுவோம். எனவே நாட்டில் நாம் வீட்டுச் சுற்றாடல்களை தினமும் சித்தமாக பேணி நாட்டின் சுகாதாரத்துக்கும் மனித இன நல்வாழ்வுக்கும் பங்-காளியாக மாறுவோம்.

## ஊடகவியலாளர் ‘தராகி’ சிவராமின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்!



ஊடகவியலாளர் ‘தராகி’ என்று அழைக்கப்பட்ட சிவராமின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எதிர் வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியள வில் பருத்தித்துறை வி.எம்.வீதியில் அமைந்துள்ள யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

வடமராட்சி ஊடக இல்லத்தின் தலைவர் கு. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், வடமராட்சி ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### தேர்தல் நடத்தை விதிகளை மீறியமை தொடர்பில்

# மோடி, ராகுல் இருவரையும் விளக்கமளிக்க கோருகிறது இந்தியத் தேர்தல் ஆணையம்!





புதுடெல்லி,ஏப்.25

தலைவர்களின் பேச்சு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடத்தை விதிகளை மீறியமை தொடர்பில் எழுந்த புகாரில், பிரதமர் மோடி, ராகுல் காந்தி ஆகியோர் விளக்கமளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. பிரிவினையை ஏற்படுத்தும் விதமாக பிரதமர் மோடி பேசினார் எனக் காங்கிரஸ் கட்சியும், ராகுல் காந்தி பேசினார் என பாரதிய ஜனதாவும் தேர்தல் ஆணையத்தில் புகாரளித்தன.

இந்த புகார் தொடர்பாக 29 ஆம் திகதி காலை 11 மணிக்குள் விளக்கமளிக்க பிரதமர் மோடி மற்றும் ராகுல் காந்திக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பா.ஜனதா தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோரும் விளக்கமளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் தனது உத்தரவில் மேலும் கூறியிருப்பதாவது:-

“வேட்பாளர்கள், குறிப்பாக நட்சத்திர பேச்சாளர்களின் பிரசார நடத்தைக்கு அரசியல் கட்சிகள்தான் முதன்மை பொறுப்பை ஏற்க வேண்டும். உயர் பதவிகளில் இருப்பவர்களின் பிரசார உரைகள் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. தேர்தல் விதிமீறல் புகார் தொடர்பாக உரிய விளக்கம் அளிக்க வேண்டும்” - என்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக ராஜஸ்தானில் தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, “பொதுமக்களின் சொத்துகளையும், தங்கத்தையும் கணக்கெடுத்து, அவற்றை அதிக குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் சமூகத்தினருக்கு பகிர்ந்து அளிக்க காங்கிரஸ் கட்சி விரும்புகிறது” என்று பேசியிருந்தார். பிரதமர் மோடியின் இந்த பேச்சுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

தேர்தல் ஆணையத்திலும் மோடியின் பேச்சுக்கு எதிராக புகாரளிக்கப் பட்டது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பா.ஜனதாவும் தேர்தல் ஆணையத்தில் ராகுல் மீது புகாரளித்தது. அந்த புகாரில்,”தேர்தல் சூழலை சீர் குலைப்பதற்காக மொழி மற்றும் பிராந்தியத்தின் அடிப்படையில் நாட்டில் வடக்கு-தெற்கு பிரிவினையை ராகுல் காந்தி உருவாக்கி வருகிறார்” என்று கூறியிருந்தது.

இந்த புகார்கள் அடிப்படையில் தான் தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது.

# தெலுங்கானா கார் விபத்தில் குழந்தை உட்பட 6 பேர் பலி!




ஐதராபாத், ஏப்.25

தெலுங்கானாவில் ஸ்ரீரங்காபுரம் தேசிய நெடுஞ்சாலையில் பயணித்த கார் ஒன்று எதிர்பாராதவிதமாக சாலையோரம் நின்ற லாரியின் பின்புறத்தில் பயங்கர வேகத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு பெண் குழந்தை உள்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்த டிரைவர் உள்பட 10 பேர் இன்று அதிகாலை விஜயவாடாவுக்கு காரில் சென்று கொண்டிருந்தனர். சூர்யாபேட்டை மாவட்டம் கோதாடா அருகே உள்ள ஸ்ரீரங்காபுரம் தேசிய நெடுஞ்சாலையில் கார் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக சாலையோரம் நின்ற லாரியின் பின்புறத்தில் கார் பயங்கர வேகத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காரில் பயணித்த ஒரு பெண் குழந்தை உள்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 4 பேர் காயமடைந்தனர். இந்த விபத்து குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

மேலும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து,

இந்தச் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்த அவர்கள் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஐ.எஸ். பயங்கரவாதிகள் 11 பேர் ஈராக்கில் தூக்கிலிடப்பட்டனர்!

## நசிரியா மத்திய சிறைச்சாலையில் செவ்வாயன்று

பாக்தாத்,ஏப்.25

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதா. செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்திய ஐ.எஸ். அமைப்பை 2017 ஆம் ஆண்டில் ஈராக் படைகள் தோற்கடித்த பிறகு, நூற்றுக்கணக்கான ஐ.எஸ். ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். இன்னும் பலர் ஈராக்கில் அல்லது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை

அவ்வகையில், மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் 11 பேருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நசிரியா மத்திய சிறைச்சாலையில் நேற்று முன்தினம் அவர்கள் தூக் கிலிடப்பட்டனர் என சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனைத்துசட்டநடைமுறைகளையும் நிறைவு செய்தபின், நீதித்துறை அதிகாரிகளின் மேற்பார்வையில் தண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் மரண தண்டனை 2003 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்டது. அதன்பின் 2004 ஆம் ஆண்டுஓகஸ்ட் மாதம் மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

# திடீரென்று ஒரேஞ்சு நிறமாக காட்சி தரும் ஏதென்ஸ் நகரம்

ஏதென்ஸ்,ஏப்.25

ஐரோப்பா நாடான கிரீசின் ஏதென்ஸ் நகரம் நேற்று திடீரென ஒரேஞ்சு நிறமாகக் காட்சியளித்தது. இதனால் பொதுமக்களிடையே பீதி ஏற்பட்டது.

ஐரோப்பா கண்டத்தின் முக்கிய நாடுகளில் ஒன்றானது கிரீஸின் தலைநகரம் ஏதென்ஸ். பல்வேறு சிறப்புகளுக்கு பெயர்போனதாக விளங்கி வரும் ஏதென்ஸ் நகரம் உலகின் மிகவும் தொன்மையான நகரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் மையப்புள்ளியாக ஏதென்ஸ் விளங்குகிறது. நவீன ஒலிம்பிக் போட்டிகளின் தாயகமாக விளங்கும் இந்த நாட்டில் பல்வேறு சிறப்புவாய்ந்த நினைவு சின்னங்களும், புராதன கட்டடங்களும் உள்ளன. பண்டைய காலம் முதலே வெளிநாட்டினரும் சுற்றுலா பயணிகளும் விரும்பி செல்லும் நகரமாக ஏதென்ஸ் விளங்குகிறது.

இந்தநிலையில் ஏதென்ஸ் நகரம் நேற்று திடீரென ஒரேஞ்சு நிறமாகக் காட்சியளித்தது. புராதன ஒலிம்பிக் மைதானம் அமைந்துள்ள சின்டக்மா சதுக்கம், பார்த்தியான் ஆலயம், லிகாபட்டஸ் குன்றுகளை உள்ளடக்கிய பழைய அகோரா, புதிய அகோரா உள்பட ஏதென்ஸ் நகரமே ஒரேஞ்சு நிறமாக மாறி காட்சியளித்தது.

இதனால் சுற்றுலா வந்த வெளிநாட்டினர் மட்டுமின்றி உள்ளூர்வாசிகளும் பீதியடைந்தனர். டூர்கோவூனியா மலை, புனித குன்றுகளை கொண்ட அக்ரோபோலிஸ்



ஆகியவையும் செவ்வாய் கிரகத்தை பிரதிபலிப்பது போல காட்சியளித்தன.

இந்தநிலையில் ஏதென்ஸ் நகரின் இந்த மாற்றத்துக்கு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா விளக்கம் கொடுத்துள்ளது.

அதாவது, வட ஆப்பிரிக்காவில் இருந்து கிரீஸ், சிப்ரஸ், மாசிடோனியோ உள்ளிட்ட நாடுகளுக்கு இந்தக் காலத்தில் மேகக் கூட்டங்கள் நகருவது வாடிக்கைதான். இந்த நிலையில் அசாதாரணமாக இந்த மேக கூட்டத்துடன் சாகாரா பாலைவனத்தின் மண்துகள்கள் கலந்ததால் கிரீசை ஒரேஞ்சு நிற போர்வை போர்த்தியதுபோல புழுதிப் புயல் தாக்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2 நாள்களுக்கு இந்தநிலை நீடிக்கும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இந்த நிலையில் ஒரேஞ்சு நிறமாக மாறிய ஏதென்ஸ் நகரின் படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகின்றன.

கனடா முரசு
பக்கங்கள் 04
வியாழக்கிழமை 25/04/2024

## அமெரிக்காவில் டிக்டொக் எதிர்காலம் கருத்துக் கூற பிரதமர் ட்ரூடோ மறுப்பு

ஒன்ராரியோ, ஏப்ரல் 25

அமெரிக்காவில் டிக்டொக் எதிர்காலம் குறித்து கருத்து தெரிவிக்க பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மறுப்பு தெரிவித்துள்ளார்.

டிக்டொக்கின் பிரதான C2



# இந்து மற்றும் இந்தோ - கனடிய சமூகத்தினருடன் ஹாலிபெக்ஸில் கெரி ஆனந்தசங்கரி உரையாடல்

**நோவா ஸ்கோட்சியா, ஏப்ரல் 25**

**நோவா ஸ்கோட்சியாவுக்கு விஜயம் செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும், பூர்வீகக்குடிகள் நலன்பேண் அமைச்சருமான கெரி ஆனந்தசங்கரி, ஹாலிபெக்ஸில் இந்து மற்றும் இந்தோ-கனடிய சமூகத்தினரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.**

இந்த நிகழ்வில் ஹாலிபெக்ஸ் மற்றும் ஹாலிபெக்ஸ் மேற்கினைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த சந்திப்பின் போது ஹாலிபெக்ஸில் செயற்பட்டு வரும் தமிழர்கள் நல்வாழ்வு மன்றம் தமது ஆயுட்கால உறுப்புரிமையை அமைச்சர் ஆனந்தசங்கரிக்கு வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்ராரியோ நெடுஞ்சாலைகளில் இனி மணிக்கு 110 கி.மீ. ஆக வேக அதிகரிப்பு

ஒன்ராரியோ, ஏப்ரல் 25

ஜூலை மாதம் முதல் ஒன்ராரியோவின் நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனத்தின் வேக எல்லையை அதிகரிப்பதற்கு மாகாண அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை 12ஆம் திகதி முதல் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர்கள் என்பதிலிருந்து, 110 கிலோமீற்றர்களாக மாகாண நெடுஞ்சாலையின் பத்து பகுதிகளில் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை 401இல் கிங்ஸ்டன் மற்றும் பெல்வில் பகுதிகளில் 250இற்கும் மேற்பட்ட கிலோமீற்றர்கள் இந்த வேக அதிகரிப்புக்குள் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரட்போர்ட்டுக்கு அருகே நெடுஞ்சாலை 403இலும் 60 கிலோமீற்றர் பகுதியிலும் வேகம் அதிகரிக்கப்படவுள்ளது.





# எதிர்கட்சித் தலைவர் பியர் பொலிவர் வெற்றிக்காக எதையுமே செய்வாராம்!

## இப்படி விமர்சிக்கின்றார் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

ஒன்ராறியோ, ஏப்ரல் 25

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எதிர்கட்சித் தலைவர் பியர் பொலிவர் எதனையும் செய்வார் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

லிபரல் அரசாங்கம் அண்மையில் மத்திய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்துடன் தங்கள் அரசியல் அதிர்ஷ்டத்தை மாற்றியமைக்க முயற்சித்து வருகின்றனர். கடந்த வாரம் வெளியிடப்பட்ட லிபரல் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் மக்கள் மத்தியல் இன்னும் எதிரொலிக்க வில்லை என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

ஆனால் பொதுமக்களின் கவலைகளைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதைத் தவிர, பொலிவரால் வேறு எதனையும் வழங்க முடியாது என ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

ஓக்வில் பகுதியில் வரவு – செலவுத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதற்கு ஒரு நிறுத்தத்தின் போது, அட்லாண்டிக் கனடாவில் கார்பன் விலை எதிர்ப்பு ஆர்வலர்களுடன் சேர்ந்து பியர் பொலிவரின் பகிரங்க கூட்டம் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போதே, ட்ரூடோ இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.




# மார்க்கம் பகுதி தன்னார்வலர்களுக்கு சுத்திகரிப்பு நடவடிக்கைக்கு அழைப்பு

ஒன்றாறியோ,ஏப்ரல் 25

மார்க்கம் – தோர்ன்ஹில் மாகாண சபை உறுப்பினரான லோகன் கணபதி மார்க்கம் பகுதியில் சுற்றுச்சூழல் சுத்தம் செய்வதற்காக இளைஞர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஏப்ரல் 29ஆம் திகதியன்று மார்க்கம் வீதி, ஸ்டீல்ஸ் எவனியு ஈஸ்ட் பகுதியில் இந்தச் சுத்திகரிப்பு செயற்பாடு இடம்பெறவுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பங்களிப்பதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம் எனவும், எமது சுற்றுச் சூழலை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருப்பதற்கு கைகோர்க்குமாறு லோகன் கணபதி அழைப்பு விடுத்துள்ளார்.

### அமெரிக்காவில்...

நிறுவனமான பெய்ஜிங் சார்ந்த பைட்டான்ஸின் பங்குகளை ஒரு வருடத்திற்கு விற்குமாறும், இல்லையெனில் தடை செய்யப்படும் எனவும் கோரும் சட்டமூலம் ஒன்றை அமெரிக்காவின் செனட் நிறைவேற்றியுள்ளது.

எனினும், கனடிய ஆளும் லிபரல் அரசாங்கத்தின் அரசியல் செய்திகளை சமூக ஊடகத்தில் செல்வாக்கில் உள்ளவர்களைப் பயன்படுத்தி பகிர்ந்து வரும் நிலையில், இது குறித்து கருத்து தெரிவிக்க பிரதமர் ட்ரூடோ மறுத்துள்ளார்.

வேறு நாட்டு அரசாங்கங்களின் தீர்மானம் குறித்து தம்மால் கருத்து தெரிவிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், சமூக ஊடகங்களில் பாதுகாப்பு, இரகசியத் தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பிற்கான முன்னேற்பாடுகளை அரசாங்கம் ஏற்கனவே செய்துள்ளதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.





# பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் வீடமைப்பு இலக்குகளை அடையும்


## வேகம் சரியாக இருப்பதாக உறுதிப்பாடு

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 25

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணமானது தமது வீடமைப்பு இலக்குகளை அடையும் வேகத்தில் பயணிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மொத்தமாக 30 மாநகரங்கள், நகரங்கள் மற்றும் கிராமங்களில் புதிய வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வீடமைப்பு அமைச்சர் ரவி கஹ்லோன் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து வருடங்களில் சுமார் 5,132 வீடுகள் தமது நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ள வீடமைப்பு அமைச்சர், மற்றுமொறு 3,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



# மத்திய அரசு 36 மில்லியன் டொலர்களை தடுப்பூசி இழப்பீட்டு நிதிக்காக ஒதுக்கியது

ஒன்ராறியோ, ஏப்ரல் 25

தடுப்பூசி இழப்பீட்டு நிதிக்காக ஆளும் மத்திய அரசாங்கமானது 36 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

2020ஆம் ஆண்டின் இறுதி முதல் தடுப்பூசிகளால் பாதிக்கப்பட்ட அல்லது மரணமடைந்தவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டத்திற்கு மத்திய அரசாங்கமானது மேலதிகமாக 36.4 மில்லியன் டொலர்களை ஒதுக்குவதாக அறிவித்துள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றுக்கான தடுப்பூசிகள் வழங்குவதற்கு ஆரம்பித்தது முதல், இந்த திட்டமும் அறிவிக்கப்பட்டது.

ஹெல்த் கனடாவால் அங்கீகரிக்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதியானது இழப்பீடு வழங்குகின்றது.



# வட்டி வீதங்களை குறைப்பது எப்போது? மத்திய வங்கியில் மாற்றுக் கருத்துகள்!

ஒன்ராரியோ, ஏப்ரல் 25

வட்டி வீதங்களை எப்போது குறைப்பது என்பது தொடர்பில் கனடிய மத்திய வங்கி ஆளும் பேரவை உறுப்பினர்கள் மாற்றுக் கருத்தை கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏப்ரல் 10 ஆம் திகதி வட்டி விகிதங்களை சீராக வைத்திருக்கும் அதன் முடிவிற்கு முன்னதாக ஆளும் குழுவின் விவாதங்களை விவரிக்கும் விவாதங்களின் சுருக்கத்தை மத்திய வங்கி ஏப்ரல் 24ஆம் திகதி வெளியிட்டது.

கனடிய பொருளாதாரத்தின் வலுவான செயல்திறன் மற்றும் தற்போதைய பணவீக்க அபாயங்களைக் கருத்தில் கொண்டு, மத்திய வங்கி விகிதங்களைக் குறைப்பதற்கு முன் அதன் நேரத்தை எடுக்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கருதியுள்ளனர்.

இதற்கிடையில், மற்ற உறுப்பினர்கள் பணவீக்கம் குறைந்துள்ளதாகக் குறிப்பிட்டு, நீண்ட காலத்திற்கு வட்டி விகிதங்களை அதிகமாக வைத்திருப்பது குறித்து கரிசனை வெளியிட்டுள்ளனர்.



# பசுமைக் கட்சியின் துணைத் தலைவரான டேவிட்சனுக்கு 60 நாள்கள் சிறை விதிப்பு

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல்25

கனடாவின் பசுமைக் கட்சியின் துணைத் தலைவர் ஏஞ்சலா டேவிட்சனுக்கு 60 நாள்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வென்கூவர் தீவில் மரங்களை அகற்றும் பெயாரி கிரீக் போராட்டங்களில் பங்குபற்றியமைக்காக அவருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தடை உத்தரவையும், பின்னர் அவரது பிணை நிபந்தனைகளையும் மீறியமைக்காக ஏழு குற்றவியல் அவமதிப்பு வழக்குகளில் ஜனவரி மாதம் ஏஞ்சலா டேவிட்சனுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டில் நீதிமன்ற உத்தரவை மீறியமைக்காக அவர் முதன்முதலில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.